தமிழ் உலகு

(புதன்கிழமைதோறும் வெளிவரும் ஓர் தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபி௵ வைகாசி௴ 11௳ (24-5-'22.) | ப. 5.

ச ஞ் சீ வ ா ஞ் ச ன்

இது அமெரிகன் பெயின் பாம்

தலை, மார், முதுகு, இடுப்பு } வலி
தேள், பாம்புக், பூச்சிக், விஷக் } கடி
பல், கால், காது, கை } நோவு

இவைகளுக்கெல்லாம் சித்த ஔஷதம் இதுவேதான்.

(உபயோகம் மேலுக்கு மாத்திரம்).

எவ்விடத்திலும் கிடைக்கும். விலை அணா எட்டு.

ஏஜெண்டுகள் தேவை!

SANJEEVINI HOUSE,

264, MINT STREET, MADRAS.

ஆந்தர ஆயுர்வேத வைத்திய சாலை

லிமிட்டெட்.

19, ஆரிஸ் ரோட்டு, சென்னை.

டாக்டர். A. லக்ஷ்மிபதி

Founder and Managing Director.

சகல வியாதிகளுக்கும் சாஸ்திர முறைப்படி

தயாரிக்கப்பட்ட மருந்துகள் கிடைக்கும்.

கியாட்டலாக்குக்கு எழுதுங்கள்.

தபால் கூலியுள்பட சந்தா

ஒரு வருஷத்திற்கு ரூ. 5—0—0

அரை வருஷத்திற்கு ரூ. 3—0—0

'தமிழ் உலகு' கார்யாலயம்

16, பசுபதி அக்கிரஹாரம்

மைலாப்பூர், சென்னை.

அறிக்கை.

இவ்வாரம் நமது பத்திரிகையில், வியாசங்களெல்லாம் சிறு எழுத்தால் அச்சிடப்பட்டிருக்கின்றன. நாம் எதிர்பாராத வண்ணம் இவ்விதம் நேர்ந்தபடியால் நமது நேயர்களை பொறுத்துக்கொள்ளும்படி நாம் பிரார்த்திக்கின்றோம்.

அடுத்த வாரம், மகாகவி டாக்டர் ரவீந்திரநாத் டாகூரின் 'சித்ரா' என்ற ஓர் நாடகம் தமிழில் வெளிவரும். நமது நேயர்களுக்கு இதை நாம் சந்தோஷத்துடன் தெரிவிக்கின்றோம்.

பத்திராதிபர்.

விஷய அடக்கம்.

சில மாயைகள் 34

கெனியா இந்தியர்கள் 35

ஈசன் செயல் 35

ம-ா-ா-ஸ்ரீ K. S. வெங்கடரமணி அய்யர் அவர்கள், M. A. B. L.

மணங்கள் முடித்த மாப்பிள்ளைத்தோழன் ... 36

ம-ா-ா-ஸ்ரீ முத்துஸாமி அய்யர் அவர்கள்

இரு முறை இறந்த அரசன் [தொடர்ச்சி] ... 38

தமிழ் உலகு

துந்துபிஹு வைகாசிமீ 11உ

சில மாயைகள்

அமெரிக்காவிலிருந்து, மிகவும் புகழ்பெற்ற டாக்டர் க்ரேன் என்பவர், லண்டனில் பெருங்கௌரவத்துடன் வரவேற்கப்பட்டு, ஓர் அரிய உபந்யாஸம் செய்திருக்கிறார். அதில் அவர் பேசிய சில விஷயங்கள் நாம் கவனிக்கத்தக்கதாயிருக்கின்றன. அவர் பேசினதாவது:—

நாம் அனுபவிக்கும் கஷ்டங்களுக்கெல்லாம் காரணம் என்னவென்றால், நாம் அநேக விஷயங்களில் முற்றிலும் தப்பான அபிப்பிராயங்களிலேயே எப்பொழுதும் உழன்று வருகின்றோம். நமது எண்ணங்கள் சரியல்லவென்று தெரிந்தவுடன், அவைகளை மாற்றாமல் முன்புபோலவே அவைகளால் கட்டுப்பட்டுக் கிடக்கின்றோம். கேவலம் ஸாமான்யமாக புத்தியின்கூர்மை வாய்த்திருப்பினும், உண்மையான படிப்பில்லாவிட்டால், நமது அறிவு குறைவாகவே யிருக்கும். வேதாந்தத்தில் சொல்லப்படும் மாயை என்பதை ஒருவன் ஜயிக்காவிடினும் அவனுக்கு முக்தி கிடைக்காததுபோல, எல்லாவற்றிலும் பூர்ணமான ஞானமில்லாவிடில், நமது துன்பங்களுக்கு ஓர் அளவு இல்லை. புத்திசாலியாகயிருந்தால்மட்டும் போதாது. ஒருவன் இடைவிடாமல் கற்கவேண்டும். மேலும் காரியாம்சத்தில் அதிசாமர்த்தியசாலியாகவுமிருந்தால் போதமாட்டாது. ஒருவன் உயர்ந்த நோக்கங்களுடன் தன்னை உயர்த்திக்கொள்ளவும் வேண்டும். எப்படியெனில், ஓர் பையன் மிகுந்த அறிவுள்ளவனாக இருந்தபோதிலும், அவனுக்கு இவ்வுலகம் தட்டையென்றே தோன்றும். அப்படி அவன் நினைப்பதில் பிசகு ஒன்றுமில்லை. இருந்தாலும் அவன் மேன்மேலும் படித்துத் தன்னுடைய அனுபவத்தாலேயே தான் நினைத்தது தப்பு எனக்கற்றுக்கொள்வான். படிப்பு என்றால் அதுதான்.

இதைப்போலவே, இன்னும் பல மாயைகள் உண்டு. அவைகளில், தர்மம் என்பது மிகவும் கசப்பாகயிருக்குமென்பதே மிகவும் முக்கியமானது. எவனும் ஸகஜமாக எண்ணுவது என்னவென்றால், மனிதர்கள் கெட்டவர்கள் என்றும், மேன்மேலும் அவர்களால் எளிதில் ஸத்யவந்தர்களாகத் தங்கள் காலத்தைக் கழிக்கக்கூடாதென்பதுமே. இதுவும் ஓர் பெரிய மாயை. மானிடப்பிறவியில் நல்லவனெனப் பெயரெடுப்பது யாருக்கும் உள்ள விருப்பம். அது எப்பொழுதும் அழியாதது. துஷ்டன் என ஒருவனைச் சொல்லுவார்களே யாகில், அவன் உள்ளம் கொஞ்சமாவது தவிக்காமலிருக்குமா? ஆகையால் தான் மேன் மேலும் உயர்ந்த கதியை மனிதர்கள் என்றைக்கும் அடைய விரும்புகின்றார்கள். இதை மறந்தே நாம் ராஜ்ய பாரம் செய்து வருகின்றோம். திருடர்களிட மிருந்தும், கொலை பாதகர்களிடமிருந்தும் நம்மைக் காப்பாற்றிக் கொள்ள நாம் எப்போதும் ஏக்கக்கொண்டு அலைகிறோமே தவிர, நாம் ஒருவரிடமும் பயப்பட வேண்டியதில்லை என்று தைரியம் கொள்ளுவது மிக்க அருமையாயிருக்கின்றது. ஆகவே குற்றம் செய்தவர்கள் உடனே தண்டிக்கப் பட்டாலொழிய, திருந்தவே மாட்டார்கள் என்று நாம் மூட எண்ணம் கொள்ளுகின்றோம். இதுவும் ஓர் மகத்தான மாயைதான். எக்காலத்திலும் நாம் இவ்விஷயத்தில் காணுவது என்ன? தண்டனைகள் எவ்வளவுக் குரூரமாக இருக்கின்றனவோ, அவ்வளவு தூரம் குற்றம் செய்தவர்கள் தங்கள் குணத்தை மாற்றிக் கொள்வது முழுமையும் துர்லபமாக ஆகின்றது. கடுமையான சிக்ஷைவிதித்தும், எந்த தேசத்திலும் குற்றவாளிகள் நடுங்கினார்கள் என்பதை நாம் பார்க்கவில்லை. தேசத்தில் கொடியவர்களும் தர்மநிதிகளாகத் திருந்தக்கூடுமாகில், சிக்ஷையென்பதால் அஃது ஒருபோதும் சாத்திய மாகமாட்டாது. நல்ல ஒழுக்கத்தில் ஜனங்களுக்கு எல்லையற்றதோர் பற்றுதலை நாம் உண்டாக்க வேண்டும். உலக வாழ்க்கையில், கண்மூடியே, சுகத்தைக் கொடுக்கும் திரவியத்தை சம்பாதிப்பதில் எவ்வளவு கருத்தொருவனுக் கிருக்கிறதோ, அதைப்போலவே நெறி வழுவாமல் நடப்பதற்கும் ஒருவனுக் களவற்றதான ஆசையை நாம் உண்டாக்க வேண்டும். இன்னமும், யஜமானர்கள், கூலி வேலைக்காரர்கள் இவர்கள் விஷயத்தில், இவ்விதமாகவே இருவரிடத்தில் குடிகொண்டிருக்கின்றதோர் தப்பெண்ணம் இவர்களுக்குத் துன்பத்தையே விளைவிக்கின்றது. ஒருவரையொருவர் ஏமாற்றுவதிலேயே கண்ணாயிருக்கிறார்கள் என்று நம்புவதால் தான் இருவருக்கும் துக்கம் அதிகரிக்கின்றது. ஒருவனுடைய க்ஷேமத்தை மற்றொருவனும் நாடுவான் என்று நினைத்தால், சகல மனஸ்தாபங்களும் ஒழிந்து, யஜமானனும் சேவகனும் அன்றையதினமே சுகமாய் வாழக்கூடும். மொத்தத்தில், கடவுளால் படைக்கப்பட்ட எல்லோரும் நல்லவர்களென்றே நாம் நினைப்பது உத்தமம். எவ்விதத்திலும், இதற்கு மாறாக நினைப்பதென்ற மாயையைக் காட்டிலும், இதுவே மூற்றிலும் தரம்.

இன்னொன்றும் உண்டு. அஃதென்னவெனில், கடிவாளமென்றால் எக்குதிரையும் வாயை மூடுமென்பதே. அது முழுவதும் அப்படியில்லை. சுகமென்பது உழைக்காத எவனுக்கும் எட்டாதது. வேலை செய்வதற்குத் தயங்குவது ஓர்வித அஞ்ஞானமே. உண்மையாகவே ஒருவன் வேலை செய்யாதிருக்கின், தன் சந்தோஷத்தில் ஒருவன் வெகுகாலம் சந்தோஷிக்கமாட்டான். அதை நாமே அடிக்கடி உணர்ந்திருப்போம். வேலையே செய்யாது எப்பொழுதும் நாம் ஆனந்தத்தில் மூழ்கியிருக்கக்கூடும் என நம்புவது, நாம் ஆழ்ந்து யோசிக்குங்கால், பிசகென்றே நமக்குத் தோன்றும். உதாரணமாக நாம் பிரயாணம் செய்யும்போது இதன் தத்துவத்தை

அறியலாம். ஓர் ஸ்தலத்திற்குப்போகுங்கால், நமக்கந்த
யாத்திரையிலுள்ள இன்பம், அப்புண்ணிய க்ஷேத்திரத்
தை நாமெட்டியவுடன், வெகுவாகக் குறைந்து விடுகிற
தென்பதை நாம் ஒப்புக்கொள்வோம். இதைப்போல
வே சுகம் என்னும் விஷயத்தில், யாத்திரையில் போல,
வேலை செய்வதிலும் நமக்கதிகமான சந்தோஷம் உண்டு.
இதை நாம் அனுபவத்தால் தெரிந்து கொள்ளலாம்.

'கட்டாய' மென்பது மற்றொரு கொடும் மாயை.
இக்காலத்தில் இம்மாயையால் நாம் பட்டிருக்கும் அவஸ்
தைகளுக்கு எல்லையும் உண்டோ! இதல்லவோ நம்
மை வேருடன் சமீபத்தில் களைந்துவிட்டது. இவ்
வுலக சரித்திரத்தில் அரசர்களென்றால், கடுமை காட்
டாதவர்கள் எவர் இருந்திருக்கின்றார்கள்? பலத்கார
மென்பதை ஆபத்துக்காலத்திலும் மந்திரமாய் உபயோ
கித்திராதவர்கள் எவர் ஆண்டு வந்திருக்கின்றனர்? ருஷ்
யாவில் இருந்த ட்ஸாரும்,ஜெர்மனியிலிருந்த கெய்ஸ
ரும் கடுமையே அவதரித்து வந்ததுபோல நடந்தார்
களல்லவா? மன்னனென்றால் சைன்ய பலத்தை முற்
றிலும் ஓர் பலமாக மதிக்காது இருத்தல் அவசியம்.
அன்பென்றத் தங்க விலங்குகளால் ராஜ்யத்தைத் தன்னு
டன் கட்டி ஆளும் மன்னன் எப்போது இப்பூமியில்
உதிப்பான்! அவனல்லவோ மன்னன்!! இதுவரையில்
பிறரை பலாத்காரம் செய்யாதிருந்தவர்கள் யாரெனில்
அவர்கள் சைன தேசத்தில் இருப்பவர்களே. பல ஆயி
ரம் வருஷங்களுக்கு முன் நாகரீகத்தின் கரையைக்
கண்டுபிடித்த இவர்கள் இன்றைக்கும் உயிருடன்
பிழைத்திருப்பது ஏன் என்றால், சைன என்னும் இவர்
களுடைய தேசத்தில், இக்காலத்தில் போல, அரசர்கள்
பயங்கரமான சைன்யங்களை வைத்துக்கொள்ளவில்லை.
சைன்யமே பலமென்று நாம் நினைக்கும் மாயையே
மாயை? இதர ராஜ்யங்களுடன் நாம் நேசமாக வாழ்ந்து
வந்தால்தான், நாமும் சூரியன் உள்ள வரையில் ஒளி
குன்றாது ஜீவித்திருப்போம். ஆங்கிலேயர்களென்றால்
ஸத்யம் என்றக்கியாதி ஸ்திரமாயிருப்பதாலேயே இங்கி
லாண்டுக்கு குறைவு வரவில்லை.

மற்றொரு மாயையைப் பற்றிப்பேசுவோம். சந்தோ
ஷமென்பது எங்கேயோ இருப்பது போலவும், நாம்
அதை யடைவதற்குப் பெரும் முயற்சி செய்யவேண்டு
மென்றும் நாம் பேசுவது ஓர் சரியான எண்ணமல்ல.
லக்ஷவருஷகாலம் ஒருவன் தனத்தை சேர்த்தாலும்,
அவனுக்கு சந்தோஷம் தெரியாமலுமிருக்கக் கூடும்.
வஸ்துக்களை வாரி எடுத்துக்கொள்வதுபோல், நாம்
சுகத்தையும் எடுத்துகொள்ள முடியுமா? சந்தோஷமெ
ன்றால், அது மனதின் அமைதிதான். நாம்நம் தேவை
களைக் குறைத்துக் கொள்ளவேண்டும். இவ்வளவும்
இருந்தால் தான் சந்தோஷம் என்று எண்ணுவது நேர்
மையல்ல. இதுவும், நாம் படித்து நம்முடைய அனு
பவத்தாலேயே அறியப்பட வேண்டும். இம்மாயைகளை
ப்பற்றி நான் இங்கே விவாதம் செய்ய வரவில்லை.
இவைகளைப்பற்றி தர்க்கம் செய்வதும் மேலுமவைகளை
ருசுப்படுத்திக் காட்டுவதும் யுக்தமாகாது. ஏனென்றால்
இவைகள் மனதின் நிலைகளே. ஓர் விஷயம் சரி அல்
லது தப்பெனக் கண்டு பிடிப்பது எப்படி? கார்யத்தி
லும் இவ்விஷயம் நமக்கனுகூலமா யிருந்து உதவினால்
தான் அது சரியென்றும், இல்லாவிடில் அது முற்றிலும்
கெடுதலென்றும் வில்லியம் ஜோன்ஸ் என்ற ஒரு
பெரிய மேதாவி சொல்லியிருக்கிறார். எதுவும் நம
க்குக் காரியத்தில் மிக்கப் பிரயோஜன முள்ளதாக
விருக்கவேண்டும். இதுவரையில் நான் பேசிவந்த
விஷயங்களெல்லாம் நமக்கு முற்றிலு முதவாது போன
தால்தான், இவை மாயையே யென இங்கு நான் நிரம்ப
வும வற்புறுத்துகின்றேன்.

கெனியா இந்தியர்கள்.

நமதுதேசத்திலிருந்து வயிற்றுப்பிழைப்பிற்காகவேறு
நாடுகள் சென்று அவ்விடம் குடியேறிய நம் சகோதரர்க
ளின் வாழ்க்கை பல இடையூறுகளுக்குட்பட்டு பரிதாப
நிலையிலிருப்பதை நமது நேயர்கள் அறிவார்கள்.
உலகத்தில் அமைதியே நிலவி வரவேண்டு மென்றும்,
புவியில் பிறந்த மானிடர் யாவரும் சுயேச்சைக் குரிய
ரென்றும், ஜாதி மதவேற்றுமைகளுக் கிடையில் ஒற்று
மை நிகழவேண்டு மென்றும், இவ்விதம் பலவாறான
நீதிகள் புகட்டி வந்து, இவை எங்கும் நிகழ்வதற்கு பற்
பல மகாநாடுகள் கூட்டிவரும் ஆங்கிலேயர்களுடைய
வெளிப்படையான மொழிகளையும், நடையில் தெளிவா
கிற கார்யங்களையும் பட்சபாதமின்றி நோக்குங்கால்,
வருந்தாத எவரும் இப்பூமியில் உளரோ! சுய நலம்
பாராட்டாது முனிவரது நடை உடைகளைப் பின்பற்றி
யும், நியாயமே முதற் கடனெனக் கொண்டும், பெரும்
நற்குணங்கள் வாய்ந்த மகானாகிய C. F. ஆண்ட்ரூஸ்
என்பார் 'சுயராஜ்யா' பத்திரிகையின் பிரதிநிதியிடம்
தெரிவித்த விஷயங்களில், கீழ் ஆப்ரிகா வில் குடியி
ருந்துகொண்டு பல துயரங்களுக்குள்ளாகும் நம்தேசத்
தினர்களின் தற்கால ஸ்திதியைப்பற்றி அவர் கூறிய
வற்றை ஈண்டு சுருக்கமாக சற்று விவரிப்போம். அவ்
விடத்தில் ஐரோப்பியர்களுக்கே வாஸத்திற்குறிய பீட
பூமிகளில் குடியிருக்க முழு சுதந்திர முண்டென்றும்,
அத்தேசமே ஐரோப்பிய குடியேற்ற நாடுகளில் ஒன்றாக
இனி கருதப்பட்டு ராஜ்ய பார உரிமை அளிப்பதென்
றும் இந்தியர்கள் அவ்விடம் குடியேறுவதை பல வரை
யறைகளால் தடுப்பதென்றும் ஆங்கிலேய மந்திரி
மிஸ்டர் சர்ச்சில் பறை சாற்றியிருக்கிறார். இவ்வாத
ரவுக்கு அவ்விடத்திய வெள்ளையர் சங்கத்தார் நன்றி
பாராட்டுவதாக தீர்மானமும் செய்திருக்கிறார். அங்கு
நிகழும் பத்திரிகைகளும் வெள்ளையர்களுக்கு முழு உரி
மையும் அளிக்கப்பட்டு விட்டதென பலமான சந்தோ
ஷபேரிகை முழக்கி வருகின்றன. தவிர ஜாதி வேற்
றுமையை முன்வைத்து வெள்ளையர்களை மற்றவர்கள்
அணுகாது விலக்கப்படுவதை கம்பாலா என்ற நகரில்
முதல் முதலாக வழங்கவேண்டுமென்று உகாண்டா
பிரதேசத்தில் அரசு புரியும் உத்தியோகஸ்தர்களுக்கு
மிஸ்டர் சர்ச்சில் மந்திரி என்ற பதவியில் ஓர் உத்தர
விட்டிருக்கிறார். இவைகளெல்லாம் கவனிக்குமளவில்
இவ்விரு வகுப்பினருக்கும் சமஉரிமை சீக்கிரம் முடிவா
கிவிடுமென்ற ருய்டர் செய்தி நம்பக்கூடவில்லை. இத
கேற்ப நம் அரசாங்கத்தாரும் இங்கிலாண்டில் பல கன
வான்களும் தனித்தனி நாடுகளில் நிகழும் விவாதங்க
ளில் தாங்கள் தலையிடுவது நியாயமில்லை யென பல சம
யங்களில் சொல்லிவந்திருக்கிறார்கள். இவ்விஷயத்
தில் பிரதி நிதிகளை அனுப்பி உபசார வார்த்தைகளை
மட்டும் பதிலாக கேட்டுவரும் வழக்கத்தை பயன்படாத
தாக விட்டு விட்டு, எவ்விதத்திலாவது பின்பு யாராலும்
மாற்றக்கூடாதபடிஓர் ஏற்பாடுசெய்யக்கடமைபட்டிருக்
கிறோம்.

ஈசன் செயல்.

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி அய்யர், M.A., B.L
எழுதியது.

பிறப்பால் நான் கேவலம் ஒரு குக்கிராமவாசி.
நவீன மேல்நாட்டு நாகரீகத்தின் விரோதி. நன்னீரற்று
நெறியற்று, வேர்க்கறையான் செறிந்த இச்சென்னைமா
நகரைக், காலத்தின் கொடுமையால், நான் அடைந்தேன்.
காவிரிக் கரையோரத்திலே, பிறந்து, வளர்ந்து, செழி
த்து, ஓங்கிவரும் ஆற்றரசைப் பெருகிய மேல்நாட்டு
வெள்ளம், தாக்கிப புரட்டி, நிலையில்லா நீரின் நடுவே,
இழுத்துக்கொண்டு போவது போலவே! என்னையும்!
எல்லாம் ஈசன் செயல்!

நகரவாழ்க்கையின் நடுவே, வருந்திவரும் எனக்கு
மனமேது, சுகமேது? கல்லுடைக்கும் வேலையிலாக்
கைதிக்கு மனம்? பெருமையை யழித்து, இயல்பையும்
மாற்றுவது இந்நகர வாழ்க்கை. அதின் நடுவே வாழ்வ
தே என் துயரம். எல்லாம் ஈசன் செயல்.

முப்பதாண்டுகளுக்குமுன், ஓர் ஏகபோகக் கிராமத்தி
லே, நதீ தீரத்திலே, தாய்வீட்டிலே, நான் பிறந்தேன்.
கறந்தபாலைக் குடித்தேன். பசுமை மாறாக்காய் கறியை
உண்டேன். வாய்க்கால்களோடு வளைந்து ஓடினேன்.
ஊற்றுகள் நோண்டினேன். அணையிட்டு நீரைப் பெரு
க்கினேன். உடன் அழித்துக், கைக்கொட்டிக் களித்
தேன். தட்டாரப் பூச்சியைப் பிடித்து வதைத்தேன்.
காலில் பாய்ந்த முள்ளையும் மறந்து திரிந்தேன் சாப்
பிடப் படுத்தினேன். தாய்முகம் சிவக்கப், பொய்ச்சிரிப்
பால் அதை மாற்றினேன். தந்தையின் செல்லத்தால்,

பொல்லாதவன் ஆனேன். அடங்காப்பயல், என்றுபேரெடுத்தேன். பாட்டிசீராட்ட, கூடப்பிறந்தசிறுமக்களைக் கிள்ளிஅடித்தேன். அவர்கள் அழ, முத்தமிட்டுக்கண்ணைத் துடைத்தேன். கன்றோடும், காளையோடும், குரங்கோடும், ஓடிக்குதித்து விளையாடினேன். மணலில் "கிளிக்கூடு" கட்டினேன்; இடித்தேன். ஓடும் வண்டியின்பின் ஓடி விழுந்தேன். நாய்க்குட்டிகளுக்கு சோறைப் போட்டேன். கத்தும் வரையில் காதைக் கிள்ளினேன். செல்லப்பிள்ளையாய் மெய்மறந்தேன். அதுவும் ஈசன் செயல்.

அப்போதே, மேல் நாட்டு வெள்ளம் பெருகி என்குக் கிராம வாழ்க்கையை அழிக்கலாயிற்றே! ஆங்கில பாஷையில் என் தந்தையடையாத தேர்ச்சியை அடைந்து, "தாசில்" செய்யும் பொருட்டு, புதுப்பள்ளியை அடைந்தேன். வேர்க்கறையானும் என் உயிர் நிலையில் அப்போதே பற்றியது. ஓங்கி வளர்ந்த தென்னையிலே பொந்திட்டுக் கூடுகட்டிக் காற்றோடு உலவி வரும் பச்சைக்கிளி மரமேறியின் கையில் பிடிபட்டுக் கைதியானல் போல்! நானும்! இதுவும் ஈசன் செயல்!

மணங்கள் முடித்த மாப்பிள்ளைத் தோழன்

தமிழ் உலகு பத்திராதிபருக்கு:—

ஐயா, நமது உலகின் வாயிலாக சென்ற 10-5-22 ல் வெளியான மாப்பிள்ளைத்தோழன் என்ற குறிப்பை படித்தேன். அக்குறிப்பை ஒட்டி எனதனுபவ குறிப்புகள் சில எழுத ஆவலுள்ளவனாக இருக்கிறேன்.

நான் கீழ்க்கண்ட அநேகநிலை பிள்ளைகளுக்கு மணங்களை முடித்த மாப்பிள்ளைத் தோழனாக இருந்திருக்கிறபடியால் எனதனுபவங்கள் சிறிது விரியும். முக்யமாய் இந்த கல்யாண சிடுக்குகள் எல்லாம் அதிகமாய் தென்னிந்திய பிராமண ஸமூகத்தாரே வைத்துக்கொண்டிருக்கிறபடியால், இவர்களுக்கிடையே ஸ்மார்த்தவடம ஜாதியில் பிறந்த நான் நமது பிராமண வகுப்பார் பலரில் மாப்பிளை தோழமை பூண்டிருக்கின்றேன்.

நான் தோழனாக இருந்த மாப்பிள்ளைகளின் தராதரங்கள்.

1. a சொல்ப மிராசுதார்வீட்டு உயர்தரபடிப்புள்ள பிள்ளை.
   b உத்தியோகத்தினர் வீட்டு உயர்தரபடிப்புள்ள பிள்ளை.
2. a பெரிய மிராசுதார் வீட்டு படிப்புள்ளபிள்ளை.
   b பெரிய மிராசுதார் வீட்டு படிக்காதபிள்ளை.
3. a வைதீகர்வீட்டு இங்லீஷ்படிப்புள்ளபிள்ளை.
   b வைதீகர்வீட்டு சாஸ்திரம் படித்தப்பிள்ளை.
   c வைதீகர் வீட்டு, வைதீக பிள்ளை.
4. ஸொல்ப உத்யோகத்திலுள்ள பிள்ளை.
5. ஸொல்ப மிராசுள்ள குடுத்தனக்காரபிள்ளை.

ஆகமேற் சொன்ன ஒன்பது வித தராதரமுள்ள மாப்பிள்ளைகளுக்கும் பலகல்யாண காலங்களிலும், நீடித்தேயும் மாப்பிள்ளை தோழன் என்ற ஹோதாவில் அதிகம் பழகி வந்திருக்கிறேன்.

இதில் மேலே சொன்ன முதலாவது தரமாகிய உயர்தரப்படிப்புள்ள பிள்ளை (College Student) க்கு தோழனாக இருந்த காலமே எனக்கு (ரைட் ஹானரபிள்) கிடைத்தகால மென கருதி யிருந்தேன். ஏனெனில் தற்காலத்து காலேஜ் படிப்புமாப்பிள்ளையே, அவன் ஏழையாயினும், பணக்காரனாயினும், உயர்ந்த மாப்பிள்ளையாக கருதப்படுகின்றான். என்ன பெரிய மிராசுதாராயிருந்தாலும், காலேஜில் படிக்கவில்லை யென்றால் கால்மதிப்புதான். இது போகட்டும்.

நான் மேற்கூறிய மாப்பிள்ளைகளுக்கெல்லாம், நெருங்கின தோழனாக பால்யம் முதலிலிருந்து, அவர்கள் கல்லியாணங்களுக்காக ஓடிஆடி அலைந்து உயர்ந்த டிகிரிகளும் பட்டங்களும் கௌரவபட்டங்களும் பெற்றேன். எனக்கு "மாப்பிள்ளை தோழன்" என்னும் கௌரப்பட்டம், மேற்படி மாப்பிள்ளைகளாலும், அவர்களின் தந்தைகளாலும், முக்யமாய் அவர்களின் மாமனார்களாலும், கல்யாணம் நிச்சயம் செய்த காலங்களிலேயே கொடுக்கப்பட்டன. என்னை பெண்வீட்டுகாரர்கள் எல்லாரும் திருமங்கல்யதாரணம் ஆகும் வரையில், தெய்வமாகவே கொண்டாடுவது வழக்கம். அதுவரையில் என் வாக்கியம் வேதவாக்கியமே.

இவ்வளவு கௌரவங்களுக்கும் ஸுகங்களுக்கும் இடையில் நான் பட்ட அவமானங்களும், இடிகளும் அனேகம். உலகில் உரலுக்கு ஒருபுறம் இடி என்பார்கள், எனக்கு இருபுறமும் இடி. நான் மேற்படிகல்யாணங்களை முடித்து வைக்கப்பட்ட பாடும், சொன்ன பொய்களும், விழித்தவிழியும் ஈசன் திருவுள்ளம்தான் அறியும். மேற்கூறிய மாப்பிள்ளைகளுக்கு தோழனாயிருந்து நான்பட்ட அவமானங்களில் சிலவையாவன.

1. சொத்து சுதந்திரத்தால் அவமானம்:—நான் மேற்கூறிய பிள்ளைகளில், சொல்ப சொத்துள்ளவும், சொத்தேயில்லாதவும், வைதீகர் வீட்டும், உயர்தரபடிப்பு படிக்கும் காலேஜ் பிள்ளைகளுக்கும், சாதாரண உத்தியோகமாய் குமாஸ்தா உலகில் விளங்கும் குமாஸ்தா தோழர்களுக்கும் நான் மாப்பிள்ளை தோழனாய் விளங்கின கல்யாணங்களிலெல்லாம் அவர்களின் மாமனார் வீட்டுக்காரர்களான பெண் வீட்டுக்காரர்கள் அடிக்கடி, என்னையா? மாப்பிள்ளைக்கு எவ்வளவு நில மிருக்கிறது? எவ்வளவு நெல் விளையபங்கு இருக்கிறது?' என்று கேட்பதுண்டு. நான் அவர்கள் காலேஜில் படிக்கும் உயர்தர நிலையையும், அவர்கள் முதல் கிளாஸில் பரீக்ஷை தேறினமஹிமைகளையும், குமாஸ்தா உலகிலிருந்த மாப்பிள்ளைகளுக்கு இரண்டாவது கிளர்க்காயிருக்கிற மகிமையையும் அவரே ஹெட்கிளர்க்காகப் போகிறார் என்றும், இவர்தான் காம்பு கிளர்க்கு இவர் வைத்தது தான் சட்டம் என்றும், வர்ணித்து சொல்லி அவர் பூஸ்திதிகளையும் சொத்துகளையும் சொல்ல வெட்கபட்டுக் கொண்டு மறைக்க முயலுவேன். வைதீக மாப்பிள்ளை தோழர்களாயிருந்த பொழுது, 'அவர்கள் நியாயசிரோமணி பாஸாய் விட்டது என்றும், வித்வான் க்ரூப்புக்கு பணம் கட்டிவிட்டார் என்றும், அவருக்கு பன்னிரண்டு கிராமம் உபாத்யாயம் உண்டு என்றும், மூன்று சாகை தலைகீழாக பண்ணிவைப்பார் என்றும்— இவர்களுக்கு சொத்தில்லாததால் சொல்ல முடியாமல் மறைத்து பேசுவேன். இப்படி பேசுவதை, சிலபாயிகள் பெண்வீட்டாரில் சூக்ஷ்ம புத்திக்காரர்கள் என்று திரும்ப 'என்னையா சொத்து மாப்பிள்ளைக்கு' என்று பெண்பாலர்கோஷ்டியில் வைத்து கேட்டுக் கொண்டேயிருப்பார்கள். சில ஸந்தர்பங்களில் என்னை பெண்கள் எங்காவது 'செவிட்டு தோழன்' என்று அழைத்து விடப்போகிறார்களே என்று பயந்தும், எங்கள் பாட்டிகம்மா அடிக்கடி, "ஆயிரம் பொய் சொல்லி ஒரு தாலி கட்டலாம்" என்று சொல்லி கேள்விப்பட்டிருந்தாலும் நான் மேற்படி மாப்பிள்ளைகளுக்கு 500 கலம், 1000 கலம், 2000 கலம் நெல் விளைய பங்குகள் உண்டு என்று பொய்சொல்லி, 'கடன் ஒன்றுமில்லை. ஆனால்; தங்கைகள் இருக்கிறார்கள். இந்தகாலத்தில்' தான் பெண்பிறந்து விட்டால் சொத்து நம்முடையதல்லவே' என்றும் மழுமாறி பொய்க்கு காது, கால், கண் கட்டி விட்டு வைத்திருந்தேன். கெட்டிக்காரன் புளுகுக்கு எட்டு நாள், ஆனால் என் புளுகுக்கோ ஐந்து நாள் தான்; மேற்படி கல்யாணங்கள் ஆகி கிரஹப்பிரவேசங்களும் கையோடு ஆனஉடனே, மாப்பிள்ளை தோழன் புளுகு வெளிப்பட, நான் அடுத்த ஆடி, ஆறுமாஸ வைபவங்களுக்கு பெண் வீடுகளில் மறுபடியும் மாப்பிள்ளை தோழனாக தலைகாட்டினவுடனே, ஆங்காங்குள்ள பெண்வீட்டு பாட்டிகள், இதரஸ்திரீகளும் முக்யமாய் என்னைச் சூழ்ந்துகொண்டு "என்னங்கணும் என்னமோ! 500 கலம், ஆயிரங் கலம் என்றீரே, அதெல்லாம் ஒன்றுமில்லையாமே? வீடுகூட பெந்தகமாமே?" என்று கேட்டவுடன் 'ஆடு திருடினவன் போல விழித்து' கல்வியே அழியா செல்வம் என்றும், நிலமும் வீடும் நிலையா செல்வம் என்றும் என் வேதாந்த பிரஸங்கத்தை ஆரம்பித்தேன். அதைக் கேட்க அவர்தான் தகுதியென போய்விட்டார்கள். நான் சுவரிடம் பாக்கியையும் சொல்லி என் அவமானத்தை நீக்கிக்கொண்டேன்.

2. இரண்டாம் சுறப்புவிட்டு கறக்கபோகபட்ட உதை:—சில ஏழை வீடுகளில் மாடுகளின் பால், தயிர், இவைகளை கொண்டே காலக்ஷேபம். இதில் அநேகம் கிழமாடுகளாகவே யிருக்கும். இவர்களின் ஆசையின் கூறு, இரண்டாவது சுறப்பும் விட்டு கறக்க நினைத்து கையை மடியில் வைத்ததும், முகத்தில் உதைத்து ரத்த பெருக்கே பாலாக கொடுக்கும் மாடுகளும் பல உண்டு.

இம்மாதிரி, நான் மேலே சொன்ன மாப்பிள்ளை தராதரங்களில், சொத்தே இல்லாதவும், சிறிது சொத்துள்ளவும் காலேஜில் படிக்கும் பிள்ளைகளிலனேகரின் தகப்பனார்கள் தங்கள் பிள்ளைகளுக்கு தகுந்த வரன் வரவில்லையென்று, அதற்காகவே படிப்பு என்று காலேஜ்களுக்கனுப்பிவருவதுண்டு. இந்த வலையில் பல சில்லரை தனவான்கள் தங்கள் பெண்களை பெற்ற பாபத்திற்காக அகப்பட்டுக் கொள்வதும் உண்டு. மேற் கூறிய பிள்ளை வீட்டுக்காரர்களுக்கு பெண் வீட்டுக்கார மாடுகளிடமிருந்து எவ்வளவு சுறப்பு விட்டு கறக்க முடியுமோ அவ்வளவு சுறப்பு விட்டு கறக்க தீர்மானித்து தங்கள் பிள்ளைகளுக்கும் போதித்திருப்பதுண்டு. இதில் சில மாடுகளை கொம்பில் கயிற்றைக் கட்டியும், சிலவற்றைக் காலை கட்டியும், சிலவற்றைத் தீனி வைத்தும் இரண்டாம் சுறப்பு விடுவதுண்டு. அம்மாதிரி, இதில் சில மாப்பிள்ளைகள், ஊஞ்சலுக்கு வரமாட்டேன் வில்க் வேணும், டிபனுக்கு வரமாட்டேன் பூட்ஸ் வேணும், நலங்குக்கு வரமாட்டேன் மோதிரம் வேணும், ஔபாசனத்துக்கு வரமாட்டேன் கடுக்கன் வேண்டும், சாப்பிட வரமாட்டேன் என் பாட்டிக்கு புடவை வேண்டும் என வெருட்டி, உருட்டி பெண் வீட்டாரிடம் கறக்கிறதுண்டு; மற்றும் சிலர், மாமனார் என்ன சொல்லப் போகிறார் என்று கல்யாணத்திற்கு முந்தியே பிடித்து அவருக்குபசாரம் செய்வதும், எது செய்ய அவர் முன்வந்தாலும், தங்களுக்கு ஒன்றும் வேண்டுவதில்லைபோல் எதற்கு அது, எதற்கு இது என்று காக்காய்ப் பிடிக்கிறதுண்டு. இந்த இரண்டுவித மாப்பிள்ளைகளுக்கும் தோழனாக இருந்திருக்கின்றேன்.

எனக்கு, கல்யாண காலங்களில் மாப்பிள்ளைக்கு வேண்டிய கடுக்கன், மோதிரம், உடுப்பு, மற்றும் மாப்பிள்ளைக்குதோன்றுவதெல்லாம்செய்து கொடுக்க சொல்ல வேண்டியதும் என் வேலைகளில் முக்கியமானவை. கல்யாணம் முதல் நாள் மட்டும், என்னிடம் "மாப்பிள்ளைக்கு" என்று கேட்டால் எதுவானாலும் உடனே கொடுக்கவேண்டும் என்ற ரௌலட் சட்டம் ஒப்புவிக்கப்பட்டிருந்தது. திருமங்கல்யதாரணம் முடிகிறவரையில் என் ரௌலட் சட்டம் அமுலில் இருந்தது. இரண்டாவது நாள் முதல் பெண்வீட்டார்கள் "நான் கோஆப்பரேஷனை" கைக்கொண்டு ஒற்றுமையா யியக்கத்தில் இரங்கவே, நான் மாப்பிள்ளைக்கு, மாப்பிள்ளைக்கு என்று, அதிகாரம் செய்ததை ஒருவரும் காது கொடுத்தே கேட்காமலிருக்கவே, ரீடிங் பிரபுவைப் போல் ஒன்றும் தெரியாது விழித்தேன். பிள்ளை வீட்டுக்காரர்களாகிய என் கக்ஷிக் காரர்களே ஒருபுறம் எனக்கு ஸாமர்த்யமில்லை யென்று தாக்க, பெண் வீட்டுக் காரர்களாம் அன்னிய வீட்டார் ஒருபுறம் எதிர்க்க என் நிலை, ஒருபுறம் சௌரி சௌராவும், ஒருபுறம் பஞ்சாப் படுகொலையு மாய்விட்டது.

என் தோழமாப்பிள்ளைகள் தாங்கள் இரண்டாம் சுறப்பு விடக்கருதி, நலங்கிற்கு எழுந்திருக்கிறதில்லை. நலங்குக்கு வேஷ்டி மஞ்சளாய்விடும் மஞ்சள் வில்க் வாங்கி கொடுத்தால்தான் என்று உட்கார்ந்திருக்க, எதிரில், கைகளில் வெற்றிலை தாம்பாளங்களுடன் குனிந்த கழுத்துகள் முறியும் தருணத்தில் நிற்கும் பெண்களும், இதை அறிந்த பெண்களின் தகப்பனார்கள், தங்களையே மறந்து ஓடியாடும் வேகத்தோடு மேல்துணிகள்கூட இல்லாமல்கையில்பணப்பையேந்தினவண்ணம் அங்கு வந்து, என்னஸார், என்னமோ ஹானர்ஸ் என்றீர், பி. எ. என்றீர் உயர்ந்தநடத்தை யென்றீர், நியாய சிரோமணி என்றீர், இதுதான் அந்தப் படிப்புகளின் முடிவோ என்று பையை அவிழ்த்து, என்னையா மஞ்சள் வில்க் 15 ரூபாய் பொறுமா என்று, 15 ரூபாயை எடுத்து விசிரி எறிய, நானும் நலங்கிற்கு நிற்கும் பெண்ணும் தலைகுனிந்து வாய் திறவாமல் சற்று நின்று, பிறகு விதியை நினைத்து பணத்தை பொறுக்கி பெண்ணின் தகப்பனாரிடமே கொண்டுபோய் கொடுக்க நினைத்த பொழுது, என் தோழர்கள் மாப்பிள்ளைகளின் தகப்பனார்கள் காதண்டைவந்து நீயே வைத்துக்கொண்டுவிடு, ஜாகைக்கு வரவிட்டு எங்களிடம் கொடு என்று சொல்ல இவர்கள் இங்கும் வந்து வைதீக ஆசையை விடமாட்டார்கள் போலிருக்கிறதே என்று நினைத்து, "சாஸ்திரிகளே அது நியாயமில்லை, ஒருகால் வில் காகவே வாங்கி கொடுத்தால் எடுக்கலாம், பணத்தை வாங்கிகொள்வது மரியாதையில்லை" யென நான் வாதிக்க அதற்கு அவர் உனக்கென்ன மாப்பிள்ளையிடம் கொடுத்துவிடேன் என்று சொல்ல ஒன்றும் அறியாமல் ஊரலுக்கு ஒருபுறம் இடி நமக்கு இருபுறமுமா இடி என்று ஏங்கி நின்றேன்.

3. பெண்களின் பிடிவாதத்தால் வந்த அவமானம்:—வைதீகர் வீட்டு உயர்ந்த இங்கிலீஷ் படிப்புள்ள பிள்ளைக்கும், டவுன்வாஸம் செய்யும் பெரிய மிராசுதார் வீட்டு பிள்ளைக்கும், மாப்பிள்ளைத்தோழனாக சென்ற பொழுது, கல்யாணங்களில் மேற்படி மாப்பிள்ளைகள், நாகரீகத்திற்கு தகுந்தபடி, கல்யாண காலங்களிலேயே தங்கள் ஸம்ஸாரங்களுடன் பேச விரும்பி, இக்காரியத்திற்கு நான்தான் ஸுந்தரமூர்த்தி ஸ்வாமியின் நிலைக்கு தகுதியெனக் கருதினார்கள்.

இந்த ஸந்தர்பத்தில் இதை படிப்பார்கள், மாப்பிள்ளைக்கு தோழன் இருக்கும்பொழுது, பெண்களுக்கும் தோழிகள் உண்டு என்பதை மறக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். இப்படி வேடிக்கையாக நலங்குகள் நடக்கும் பொழுது மாப்பிள்ளைகள் என்னைபார்த்து, "ஸக்கனிராஜ"—"ஸுஜனஜீவன"—என்ற கீர்த்தனங்கள் பாடச்சொல்லு, "மஹாத்மா காந்தி" என்ற பாட்டு பாடச் சொல்லு என்று சொல்வார்கள். அவர்கள் சொன்னதே மணப்பெண் காதில் விழுந்திருக்கும் என நினைத்து நான் சீக்கிரம் பாடவேண்டும் என்று மட்டும் சொல்வேன். நான் சொல்வது செவிடன் காதில் ஊதின சங்காகிவிடும். ஏனெனில் தற்கால நாகரீகத்தில் பெண்களுக்கு உள்ள குணங்களில் முதல் குணம் "பிடிவாதமாக" ஏற்படுத்திக்கொண்டு விட்டபடியாலும், தங்கள் ஸாகஸத்தினால் கல்யாண பந்தலிலேயே புருஷன் சொல்வதை கேட்காமல் தன் இஷ்டப்படி புருஷனை நடத்துபவளே, உயர்ந்தநாகரீகப்பெண் எனக்கருதப்படுவள் ஆனதாலும், நான் சொன்னதும் என்னிடம் மாப்பிள்ளை சொன்னதும் வீண்.

மற்றும் மாப்பிள்ளைதோழனாகிய எனக்கு வேறு ஒரு சாபம்உண்டு. அதாவது நான் எது சொல்கிறேனோ, அதற்கு நேர் விரோதமாக மணப்பெண்ணை நடக்க வேணும் என்று அவள் தோழிகள் அப்பெண்ணுக்கு சொல்லி நடத்துவார்கள். அதாவது நான் வாதியானால், பெண்ணின் தோழிகள் பிரதிவாதி, நான் உடனே என் கௌரவத்தைவிடாமல், மாப்பிள்ளையிடம் சாவி கொடுத்து முடுக்கி, அந்த பாட்டு சொன்னாலல்லாது 'வெற்றிலைவாங்காதே' என்பேன். என் கக்ஷிதோல்வியே. ஏனெனில் மணப்பெண் தன்தோழிகளின் தூண்டுதலின்மேல், பாட்டும் பாடாமல் குனிந்து தன் புருஷன் முகத்தை பார்த்து கையை தொட்டு கொடுக்க வந்தவுடன் இயற்கையாய் என் நண்பன் மாப்பிள்ளை என் வார்த்தையை மறந்து தங்கள் மனைவிகள் முகத்தை பார்த்து ஸாகஸத்தில் ஈடுபட்டு விடுவார்கள். கடைசியில் என் நிலை பெண்ணின் தோழிகள் பரிகஸிக்க, எழுந்து ஓடிவிட தோன்றும். இங்கும் அவமானம்.

4. எதிர்சீர்கள் குறைவால் வந்த அவமானம்:—இப்படி நான் என் தோழர்கள் மாப்பிள்ளைகளுக்காக, பெண்வீட்டுக்காரர்களிடம் முக்கியமாய் சண்டைபோட்டு மாப்பிள்ளைக்கு வேண்டிய பலதினுஸு உடுப்புகள் பாத்திரங்கள், மாப்பிள்ளை வீட்டாருக்கு வேண்டிய துணிமணிவகை முதலியவைகள் வாங்கி கொடுக்கபோக ஒருஸமயம் என் தோழனாகிய ஓர் மாப்பிள்ளையுடன் அவன் வேட்டகத்திற்கு மதுரைக்கு சென்றேன். அது தீபாவளி சந்தர்ப்பம். நான் அங்கு போனதும், பெண் வீட்டுக்காரர்களை நான் முன்னமே அறிவேன். ஆதலால் அவர்கள் ஆதரவுடன் என்னை உபசரித்து மத்தியானம் ஒழிவு நேரத்தில் ரஹஸ்யமாய் தனியே அழைத்துக்கொண்டு போனார்கள். என்னைக் கூட்டிக்கொண்டு போனது என் தோழனின் வேட்டாத்து பாட்டி. சற்று

நேரத்திற்கெல்லாம் என்னை சுற்றி என் தோழனின் மாமியார், மைத்துனர்கள், அருமை மைத்துனிகள் ஆக அநேக பெண்மக்கள் கூடி விட்டார்கள்.

இப்படி கூடிக்கொண்டு "என்னங்கணும் ஒசத்தி, ஒசத்தி, நல்ல மனுஷாள் என்றீரே. குழந்தை பொறியிட்டதற்கு ஒன்றுமில்லையாம், மஞ்சள் நனைத்ததற்கு ஒன்றுமில்லையாம்; அதுதான் போகட்டும்; ஆடி ஆச்சு, ஆறுமாஸம் ஆச்சு, ஸ்தாலீபாகமாச்சு, 'ஒரு ரவிக்கை துண்டு' எங்கள் பெண்ணுக்கு கிராக்கியாகிவிட்டது. அதுவே அடுத்த வீட்டிலும் அவர்கள் பெண்ணுக்கு ஸம்பந்தி செய்திருக்கிறாள் பாரும். ஆடிக்கு நாகஒத்து பங்கி, ஆறுமாஸத்திற்கு வைர அட்டிகையாம். இதோ தீபாவளிக்கு வந்திருக்கிறார்கள்; 18 தினுஸு பக்ஷணங்களுடனும் கோகர்ஜான் கொட்டடி, பவழக்கொடி புடவையும் வாங்கிக்கொண்டு. உங்கள் பிள்ளைக்கு கடுக்கன் போடவில்லை யென்றுமட்டும் கிட்டிகட்டி வாங்கினீரே போங்கணும் போம்", என்று என்னை தாறுமாறாக ஏச, இதை என்தோழனிடமும், அவன் பெற்றோர்களிடமும் வந்து சொல்ல, அதெல்லாம் ஒன்றும் சொல்லியிருக்கமாட்டார்கள், எல்லாம் உன் கை சரக்கே என்று ஏச; கல்யாணத்தின் பொழுதே கை கெடியாரம் வாங்கிதருவதாகச் சொல்லிவிட்டு இனிமேல்தான் வாங்கிக் கொடுக்கப்போகிறார்களோ என்றும், கோபாலனுக்கு தீபாவளிக்கு சங்கிலி பண்ணிபோட்டிருக்கிறார்களாம் என்று இவர்களும், அளவில்லா பேராசையில் எரிந்துவிழ என் தோழமை நிலை எவ்வாறிருக்கும் என்று ஊகித்தறியுங்கள்.

5. **கல்யாணத்திற்கு வந்தவர்களாலும் அவமானம்:**—பெரிய ஜமின் மிராசுதார் வீட்டுபிள்ளை ஒருவர் மாப்பிள்ளையாக அவருக்கு தோழமை பூண்டு, அவர் கல்யாணத்திற்கு திருச்சிணப்பள்ளி சென்றேன். பெண்வீட்டுக்காரரும் ஒரு பெரிய மிராசுதாரே. ஆனால் நாகரீக கப்பலில் போனவரில்லை. என் தோழனாகிய பிள்ளைவீட்டுக்காரருக்கு மிராசுடன், பெரிய உத்தியோகமும் உண்டு. இவர்கள் அதிக பெரிய நகரங்களாகிய பம்பாய், கல்கத்தாவில் காலம் கழித்தவர். ஏதோ கல்யாண ஸம்பந்திகள் இருவரும் ஒருவருக்கொருவர் ஒற்று குறையில்லாதிருந்து வருகின்றனர் என்றால், எங்கள் கட்சியில் வந்த உறவினர்களில் ஆண், பெண்பலரும் நாகரீக உன்னதை அடைந்தவர்கள். இவர்களில் பெரிய புகையிலை தின்னிகள், காபி, டீ, ஸோடா, குடியர்கள், புல்ரம்மும், ஐவரிகார்டையும் கைவிடாத சூதாடிகள், அபின்கலந்த அழுத்தின காபியில் அல்லும், பகலும் முழுகி கிடப்பவர்கள், மோட்டாரிலேயே செட்டாக குடித்தனம் செய்து மோட்டார்விட்டு இறங்காத பெண்மணிகள், ஆக இவர்களே முக்கியஸ்தர்களா யிருந்தனர்.

இவர்களும் மாப்பிள்ளை தோழன்தான் சிலாவணியுள்ளவன் என வறிந்தோ, அல்லதுஇவன்தான் தூது போக தகுந்தவன் என அறிந்தோ, சிலர் ஸெண்டட் சிவகிரிபுகையிலை கேட்பவரும், சிலர் வேதாரண்யம் வெறும் புகையிலை கேட்கவும், சிலர் அழுத்தினகாபி கேட்பவரும், சிலர் வெள்ளைகாபி கேட்பவரும், சிலர் மேட்டுபாளயம் காபி கேட்பவரும் சிலர் குடகு காபி கேட்பவரும், சிலர் ஐவரி (Finish) ஃபின்ஃபினுட்டி கட்டு கேட்பவரும், சிலர் (Gold Edged) தங்கமுகப்பு நியூயார்க் கட்டு கேட்பவரும், சிலர் ஸ்வதேசி கட்டுகேட்பவரும், சிலர் ஐஸ்கோலா கேட்பவரும் சிலர், ஜிஞ்சர் யேல் கேட்பவரும், சிலர் சுக்குவெள்ளம் கேட்பவரும் பெண்பாலரில் பலர், கதம்பம் கேட்பவரும், ஜண்பகப் பூகேட்பவரும் சிலர் பாரிஸ், இராஸ்மிக், சோப், செண்ட் கேட்பவரும். பலபெண்கள், ஊர்சுற்றிபார்க்கவேண்டும், ஒரு ஸெடன்ஹாம் பாடி, "ரோஸ்ஸ்ராய்ஸ்" கார் கொண்டு வரச்சொல்லும் என்பவரும். நான்பெண் வீட்டுகாரன் முகத்தை பார்க்க அவர் என்முகத்தை பார்க்க, ஏரோப்ளேனில்லையே இருந்தால் ஏறி யோடிவிடலாமே யென்றுயோஜித்து நின்றோம்.

6. **மாப்பிளைத் தோழமை மணக்கோலம் மட்டும் தான்:** மற்றும் ஒருநண்பர் மாப்பிள்ளையாக அவருக்கும் தோழமை. இவர் கரூர் ஜில்லாவில் ஓர் எளிய வம்சத்தில் பிறந்தவர். இவர் உயர்தரக்கல்வியை மதித்து பெங்களூரில் ஓர் உயர்ந்தபதவியிலிருப்பவர் தமது பெண்ணைக் கொடுத்தார். இக்கல்லியாணத்தில் பல இடுக் கண்களுக் கிடையே நானே மாப்பிளைத்தோழனாக அதிக கௌரவமும், ஸுகமும் பெற்றவன். இம்மாப்பிள்ளை அதிபால்யம்முதல் என்னுடன் நெருங்கிப் பழகினவர். கலியாணத்திலும் எனக்கேஅதிக செலாவணி கொடுத்தவர். கல்யாணங்கள் எல்லாம் முடிந்த பின்னர் இவர் ஆறுமாஸ கல்யாணத்திற்காக தமது மாமனார் வீடு போயிருந்தார். நான் இவரது பெற்றோர்களைக் கண்டு கேட்டபொழுது, எங்களையார் சீண்டுகிறார்கள். இந்தபயலும்கூட, போகிறேன் வருகிறேன் என்று எழுதுகிறதில்லை. காலேஜி ஒருநாளைக்கு லீவு என்றாலும் ராத்திரி மெயிலில் உடனே பெங்களூராம். பிகு ஸுகு தெரியவில்லை. இதற்காகத்தான் பெரிய பெண்ணாக கல்லியாணம் பண்ணக் கூடாது என்று சொன்னேன். அவன் போவதும் வருவதும் உனக்குக் கூடவா தெரியாது! என்று பலவாறு வருத்தப்பட்டார். நான் "கல்யாணம் முடிந்த பிறகு கடிதமே வருகிறதில்லை. இருந்தாலும் நான் பெங்களூருக்கு போக வேண்டியிருக்கிறது. போனால்பார்த்துவருகிறேன்" என்று சொல்லி புறப்பட்டு பெங்களூரில் எனது நண்பன் மாமனார் வீட்டிற்கு போனேன். அவரைக் கண்டுஎனது நண்பர் இங்கே வந்திருக்கிறாரா என்று விசாரித்தேன். உடனே அவர் பியூனை அனுப்பினார். எதிரிலிருந்த பங்காளாவின்மெத்தையிலிருந்துஎனதுநண்பர் இறங்கிவந்தார். சற்று நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு, பிறகு பார்க்கிறேன் என்று சொல்லி திரும்பவும் போய்விட்டார். பின்னர் என்னை உபசரிப்பவர் ஒருவரையும் காணோம். ஏதோ வாசல்பரதேசியாய்காத்திருக்கின்றேனே என்று பெண்வீட்டுக்காரர்கள் அழைத்து அன்னமிட்டார்கள். இவ்வளவாவதுமறக்காமலிருந்தார்களே. இந்த கலியாணத்தின் காரணமாகிய நம்மை எவ்விதம் இவ்வளவு சீக்கிரம்மறக்கயத்தனிக்கிறார்கள் என்று ஆச்சரியமுற்று பிறகு எனது நண்பர் வருவார் என்று மாலை 4-மணி வரையில் காத்திருந்து பார்த்தேன். இதற்குள் பங்களாவிற்கு ஒரு நாழிக் கொருதரம் ஒரு பரிசாரகன் ஒரு தினுஸு டிபன் எடுத்து போய்கொண்டிருந்தான். இதெதற்கு என்று பங்களாவிற்கு போய் பார்ப்போம் என்று பங்களாவிற்கு போய் மாடி ஏறப்போனேன். வழியில் ஒரு காவற்காரன், அங்கே போகக்கூடாது சின்னம்மாவும் மாப்பிள்ளை அய்யாவுமிருக்கிறார்கள் என்றான். உடனே "வலங்கிமானில் பிறந்தாலும் வாஷிங்டன் மேடையிலல்லவோ யிருக்கிறார்; இனி நம்முடன் பேசார்" என்று எண்ணி, பிறகு எனது ஆப்த நண்பனாயிற்றே என்ற ஆவலினால் காவற்காரனறியாமல் வேறு வழியாகவந்து, கதவின் இடுக்கு வழியாக எனது நன்பரை கவனித்தேன். மாப்பிள்ளை மணப்பெண்ணிடத்து ஒரு மரப்பிள்ளையாக அடிமையாய் ஸ்திரீ ஸ்வந்திரம் பூராவும் கொடுத்த நாகரீகராகி தான் பிறந்தது, வளர்ந்தது, தோழமைபூண்டது அனைத்தையுப் மறந்திருப்பதை கண்ணுற்றேன். இவ்வளவு வேகமா இந்நாகரீகத்திற்கு என்றாச்சரியமுற்றேன். உள்ளே அவர்கள் பேச்சுகளுக்கிடையிலேயே எனக்கும் இரண்டு திட்டும் வைசவும் நடந்தது. "இவருக்கு என்ன இங்குவேலை, யார் அழைத்தார்கள்" என்று பேசிக்கொண்டிருந்தார்கள். இதைகேட்ட நான், எனது நண்பரிடம் விடைபெறக் கருதி வேலைக்காரனிடம் சீட்டுகொடுத்தனுப்ப அவன் அதை கிழித்துவிட்டு, கொடுத்தாய்விட்டதய்யா? அம்மாகோச்சுக்கிறாங்கய்யா? உங்களுக்கு வேலை கிடையாதோ என வேலைக்காரனும் அவமதிக்க, பிடித்தஓட்டம் போட்மெயிலில் ஏறி இப்பொழுதுதான் தமிழ் உலகில் வந்து இறங்கினேன். சற்று களைப்பாறுகிறேன்.

இப்படிக்கு,

மணங்கள் முடித்த மாப்பிள்ளை தோழன்.

இருமுறை இறந்த அரசன்

(தொடர்ச்சி)

அப்பொழுது ஒரு கிழவியும் ஒரு சிப்பாயும் அங்கே வந்தனர்.

சிப்பாய்—"அய்யரெங்கே."

கிழவி—"புது அரசைப்பார்க்கப்போயிருக்கிறார். எங்களுக்கெல்லாம் கவலையாயிருக்கிறது

இந்த அரசன் பழையவனைப்போல் பைத்தியம் பிடித்துத்திரிபவனல்ல. இவனை இலகுவாய் ஏமாற்ற முடியாது. முன்னவனுக்கு அய்யர் நிரம்பவேண்டியவர்போல் நடந்து வந்தது இப்பொழுது கஷ்டமாய் முடிந்தது. ஆகையால் சற்றும் தாமதியாது புது அரசனைக்கண்டு திருப்தி செய்விக்கவேண்டுமென்று அய்யர் செய்தி கேட்ட நிமிஷமே புறப்பட்டுப்போய் விட்டார்.''

" ஆமாம். அதுவே சரி. நானும் போகிறேன். நல்ல காலம் அந்த ராஜா இறந்துபோனது. சண்டை வேண்டாம் சமாதானம் செய் என்று என்னை தூது அனுப்பித்தார். நல்லவேளை அது செய்து முடியவில்லை. இந்தப் புது அரசனுக்கு அதெல்லாம் இஷ்டமில்லை. ஆகையால் கட்டாயமாய் யுத்தம் நடந்தே தீரும். எங்களுக்கெல்லாம் மேலுக்குமேல் பதவிகள் கிடைக்கும்" என்றான் அந்தச் சிப்பாய்.

இதுகேட்ட அரசன் அங்கே ஒரு க்ஷணங்கூட தாமதிக்கவில்லை. "என் ஜனங்களைப்போய் பார்க்கிறேன். அவர்களுக்கு இப்புது அரசனுடன் சிநேகம் பாராட்டி அடையவேண்டியதொன்றுமில்லை. நான் கொடுத்தவற்றை எல்லாம் அவன் மறுபடி பிடுங்கிக்கொள்ளுவான் அல்லவா?" என்று திரும்பினான். இதற்குள் அரண்மனைக் கடிகாரம் கால் மணி யடித்தது.

இவன் சாதாரணமான அரசனல்லன். தன் தேசத்தில் ஏழைகள் வசிக்கும் மூலைமுடுக்குகள் எல்லாம் நன்கறிந்தவன். ஒருவருக்கும் தெரியாமல் மாறு வேஷம் பூண்டு இவன் அடிக்கடி அங்கெல்லாம் திரிவதுண்டு. அங்கே ஜனங்கள் படும் துயரத்தை கண்ணுற்று அதின் நிவர்த்தியின் பொருட்டு வேறு எந்த அரசனும் முயன்றிராத முயற்சிகளை யெல்லாம் செய்தவன். அவன் அரண்மனையிலுள்ள ஒருவருக்குமே அவனைக் கொண்டு போக வந்த கொடுஞ் சுரம் எங்கிருந்து வந்தது என்று தெரியாது. அவனுக்கு மட்டும் சந்தேக முண்டு. எங்கிருந்து அந்த தொத்துநோய் வந்தது என்று அந்த இடத்தை நோக்கி இப்பொழுது புறப்பட்டான். இப்பொழுது அவனை அந்த ஜ்வரநோய் ஒன்றும் செய்யாதல்லவா?

அவன் போனவிடத்தில் வீடுகள் மிகக்கேவலமான ஸ்திதியிலிருந்தன. ஜனங்கள் நோயாலும் துன்பத்தாலும் வருந்தினர். இப்பொழுது இரவில் அதிக நேரமானபோதிலும் ஆங்காங்கு கும்பல் கும்பலாய் கூடி அரசன் மரணத்தைப்பற்றியும் எப்பொழுது அடக்கம் செய்வார்கள் என்றும் பேசிக் கொண்டிருந்தனர். அங்கிருந்த கள்ளுக்கடை வாசலில் ஐந்தாறு மனிதர் வட்டமாய் உட்கார்ந்து குடித்துக் கொண்டிருந்தனர். அவர்களருகே அடைந்ததும் அரசன் சற்று ஒதுங்கி நின்று உற்றுக்கேட்டான். அப்பொழுது ஒருவன் "நல்ல வேளை துலைந்தான் அந்த பாபி ஒரு கால்காசு கூட சும்மா கொடுக்கமாட்டான். இப்படி ஒரு அரசன் இருந்தென்னபயன்? இவ்வளவு செட்டாய்இருந்தால் வியாபாரம்எப்படி நடக்கும்? புதிதாய் வரும் அரசன் என்னமோ இவன் போலல்லாமல் வேறே மாதிரியாம். நல்ல நல்லகாரியங்கள் எல்லாம் சிக்கிரம் கைகூடுமாம்."

"ஆமாம் அய்ய" என்றான் மற்றொருவன் "அவன் சுத்தப் போக்கிரி, அதிகப் பிரசங்கி. கண்டவர் காரியத்திலெல்லாம் தலையிட்டுக் கொண்டிருந்தான், வீட்டை எப்பொழுதும் சுத்தமாய் வைத்திருக்கவேண்டுமாம். இங்கேஇந்தக்கள்ளுக்கடைப் பக்கம் எட்டிக்கூட பார்க்கக்கூடாதாம். அப்படி இருக்க வேண்டும் இப்படி இருக்கவேண்டும் என்று ஓயாமல் தொந்திரவு கொடுத்து வந்தான். ஒரு மட்டும் துலைந்தானே பிழைத்தோமோ! அவனுக்கென்ன நம்முடைய வேலை எப்படிப் போனால்"

"ஆமாம் அப்பா, இந்தராஜக்களை எல்லாம் ஜாடாய் ஒழித்து விடவேண்டியது; இல்லை, தீராதென்றால், புதுராஜாவைப் போலிருக்கவேணும். இருந்தால் ராஜாக்களைப் போல இருக்கவேண்டாமா? கள்ளுக்கும் புட்டிசாராயத்திற்கும்வித்தியாசம் அறிந்தவனாய் இருந்தால் தானே நன்றாயிருக்கும்.'

"தூக்குபோடுவதைகூட நிறுத்த வேண்டுமென்றானப்பா, இந்தஅரசன். இதைவிட அநியாயம்வேறே யுண்டோ. எலலாரையும் ஜெயிலில் போட்டு இன்னும் அதிகவேலைவாங்கலாமென்று அல்லவா நினைத்தான் அவன்! இல்லாவிட்டால் சும்மாவாவது பிரஜைகளின் உயிரைப்பற்றி அவனுக்கு அவ்வளவு சிரத்தை எங்கிருந்து வந்தது" என்று ஒருவன் சொல்ல, எல்லோரும் அதை அங்கீகரித்து கைகொட்டிச் சிரித்தனர். அதைக் கேட்டு வெறுப்புடன் திரும்பும்போது அரைமணி அடித்தது. ஆ! இன்னும் அரைமணிதான் இருக்கின்றது.

சிறைச்சாலையை நோக்கிச் சென்றான் அரசன்; அங்கே குற்றவாளி யொருவனை மரணதண்டனை விதித்து காலையில் தூக்கில் இடவைத்திருக்கும் அறையினருகில் சென்றான். தன்மடியில் ஒருகாகித்தை வைத்து எழுதிக்கொண்டிருக்கும் கைதியை கவனித்து பார்க்கும் சமயத்தில், காவலாளி ஒரு அரண்மனைஉத்தியோகஸ்தனுடன் திறையறைக்குள் நுழைந்தான்.

கைதி தலை நிமிர்ந்து "ஐயா, நான் இப்போது கூடத்தயார். இந்தக்காகிதத்தை மட்டும்என்மனைவியிடம் கொடுத்து விடுங்கள்" என்று சொல்லி முடிக்குமுன், கூடவந்தவன் "புது அரசன் நீ செய்தவற்றை ஒரு பெருங்குற்றமாகச் சொள்ளமாட்டான். நீ கட்டாயம் தப்பிப்பாய். நாளைய தினம் உன்னை விடுதலை செய்வார்கள். உன்னதிர்ஷ்டம் தான் அரசன் இறந்துபோய்விட்டான்." என்று சொன்னான்.

"ஆ.' இறந்து விட்டானா? பாவம்! அவன் மிகவும் நல்லவனாயிற்றே! நான் குற்றம் செய்திருந்தும் என்னைஎவ்வளவுமரியாதையாய் நடத்தினான். அவன் மனைவியும், பாவம், இளம் வயது. மறுபடி பிழைத்து வந்து விடமாட்டானா என்று இருக்கிறது எனக்கு" என்று கைதியின் கண்களில் நீர்ததும்பி நிற்க அரசன் வெட்கி அங்கிருந்து அரண்மனையை நோக்கி விரைந்து சென்றான்.

அப்பொழுது முக்கால் மணி யடித்தது. இந்த அவமானம் அவனால் தாங்க முடியவில்லை. தன்னிஷ்டர்கள் கடுத்துப் பேசியதைவிட தன் விரோதி தன்மேல் பச்சாத்தாபமடைந்து கூறிய மொழிகள் அவனை ஊடுருவிப்பாய்ந்து வருத்தியன. இப்படி தன்னுயிர் தனக்கு கிடைப்பதை விட சாவதே மேல் எனக்கருதினான். ஆயினும், தான் இயற்கையாய் நல்லசுபாவமாதலால், மற்றவனிடம் நற்குணத்தைக் கண்டதில் ஒருவித சந்தோஷம் சற்று உண்டாயிற்று. தன் பூர்வ சரித்திர முழுமையும் உடனே நினைவிற்கு வரவே "நாம் எப்படி எல்லாம் ஆசைவைத்து எண்ணினோம்? ஜனங்கள் இன்னும் சீர்திருந்தத்தகாதவராக இருக்கின்றனரே! ஒரு சிறு குழந்தையின் மழலைமொழியும் குற்றம் செய்த கைதியின் தயாள குணமுமா என்னுயிரைக்காப்பாற்ற வழியாவது? இப்படி உயிர் வாழ்வதில் தான் பயன் ஏதேனுமுண்டா? வேறெங்கும் போகாமல் நேராய் போய் படுத்துக் கொண்டு சாகத்தயாராயிருப்போமா? அறியவேண்டியவற்றை அறிந்தாய்விட்டது. இனி சாவதில் துன்பமில்லை. கலங்காது யமன்வரவை எதிர்பார்க்கலாம். விதியை நொந்தேனே! அது இப்பொழுது எவ்வளவு யுக்தமாய் தோன்றுகின்றது" என்று இவ்வாறெல்லாம் எண்ணினான்.

ஆகாயத்தில், சந்திரனைமேகக் கூட்டங்கள் மறைத்தன. குளிர்காற்று ஊடுருவிச்செல்வது போல்வீசியது. அகண்ட இவ்வுலகில் நாமெவ்வளவு தனித்திருக்கிறோம் என்றஓர்வித அபூர்வ உணர்ச்சி உண்டாயிற்று. அரசன் மனம் தளர்ந்தான். வாஸ்தவமாய் தனக்காக கவலைப்பட ஒருவர்கூட இல்லையா. உண்மைக்காதலுடன் ஒருமுறை ஒருவர் ஒரு பார்வை பார்ப்பாராயின் வேண்டுமென்றவற்றையெல்லாம் அதர்க்காகக் கொடுத்து விடுவான். அன்புத்தாகத்தால் அவன் அவ்வளவு தபித்தான்.

இன்னும் சில நிமிஷங்கள் தானிருந்தன. "இவ்வளவு நேரம் தாமதித்தோமே, இனிப்பொழுதையும் வீணில் செலவிடக்கூடாது" என்று, தனக்குப் பிறர் செய்த அபராதங்களை முற்றும் மறந்து தன்னை ஒருவாறு தேற்றிக்கொண்டு தன் மனைவியின் படுக்கையறையின் வாசலையடைந்தான். கதவு சற்று திறந்திருந்தது. உள்ளே நுழையத்தயங்கினான். இதுவும் கானநீர் போலாகுமோ, ஒன்றுமறியாமல் திரும்புவதல்லவா நலம். "கூடாது இது வரைபயந்து நான் எந்தக் காரியமும் செய்யவில்லை" என்று சொல்லிக் கொண்டான்.

அவன் மனைவி கணப்பினருகில் முகத்தை மூடிய வண்ணம் தலைவிரித்து உட்கார்ந்திருந்தாள். அதை கண்டதும் அவன் மனம் கொதித்து "ஆ! பாபி, சந்தேகித்தேன்" என்று தன்னையே வைது கொண்டான். அவள் விரலில் தானிட்ட மோதிரம் ஒளி வீசியது. அதை விட்டு அவள் ஒருக்கணமும் பிரியாளே. உள்ளபடியே அவளைத் தேற்ற வேண்டுமென்று ஆத்திரப்பட்டான். அவளுடைய தோழிகள் முதல்நாளிலே இப்படி அவளை தனியே விட்டு எங்கு சென்றனரோ, ஏதோ ஆழ்ந்த யோசனை செய்கிறாளே. தன் பெயரைக் கூப்பிட்டுக் கதறுவாளோ? என்று திகைத்து நிற்கும்போது ஒரு மெல்லிய சத்தம் அரசன் காதில் விழுந்தது. தனக்கும் தன் மனைவிக்குமே தெரியு மென்றிருந்த ஒரு இரகசிய வழியின் கதவு திறந்து ஒருவன் தன் மனைவியின் முன் வந்து நிற்கக் கண்டான். இராணி உடனே வாயில் முன் விரலை வைத்து பேசாமலிருக்கும்படி, எச்சரித்து அவன் மார்பில் ஆசையுடன் சாய்ந்து அவனைத் தழுவி கைகளால் கட்டிக்கொண்டு,

"ஸ்! அப்பா. ஒரு மட்டும் வந்தாயே, என்ன சுகம்! எனக்கு மிகவும் பயமாயிருந்தது. முதலில் அவன் கையை சாகுமளவும் பிடித்துக் கொண்டிருக்க வேண்டியிருந்தது. பிறகு இங்கே தனித்திருக்க பயமாயிருந்தது. எங்கே அவன் பூதரூபமடைந்து வந்து விடுவானோ என்று நடுங்கி நடுங்கி நடக்கவேண்டாம். விசாரமற்று ஆனந்தமாயிருக்கலாம்" என்றனள். இதைக்கேட்ட அரசன், அவள், தன் கையினின்றும் கணையாழியையும் கழற்றி வந்தவன் கையிலிடுவதையும் கண்டான்.

மணி பன்னிரண்டு அடித்தது, காவல் காத்தவர் திடுக்கிட்டு விழித்தனர். அரசன் படுக்கையில் முன்போல பிரேதமாய் காணப்பட்டான். ஆனால் அவன் முகத்தில் மட்டும் விசேஷ மாறுபாடுகள் விளங்கின. "இராணியை இதைப்பார்க்க விடக்கூடாது" என்று பேசிக்கொண்டனர்.

சுதேசியமானது ! உடயோகமானது !

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒத்தைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு 0—6—0	டப்பி 1-க்கு 0—2—0	டப்பி 1-க்கு 0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

காஞ்சீபுரம் கருடசேர்வை

விளம்பரங்கள்.

நாளது வைகாசிமீ உற்சவத்தில் ஏராளமான ஜனங்கள் வெளியூர்களிலிருந்து சேருவார்கள். ஷை காலத்தில் துண்டுபிரசுரங்கள், நோட்டீசுகள், படமுள்ள விளம்பரங்கள் முதலியன வீடுவீடாகவும் முக்கிய இடங்களிலும், வினியோகப்படுத்தி வியாபாரவிருத்தி செய்வதற்கு தக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். விவரங்களுக்கு போதுமான தபால் முத்திரைகளுடன் எழுதவும்.

MADRAS ADVERTISINGS
(சென்னை விளம்பரங்கள்).
10, VENKAIER STREET, MADRAS.

வேண்டும்

அளவு 27" × 17" மேற்படாத

பிரகடனங்கள்

ஜட்காவண்டி

மேற்கூரையில் ஒட்டுவதற்கு

நூற்றுக்கு

தினத்திற்கு ரூ. 5-0-0

வாரத்திற்கு ரூ. 21-0-0

சென்னை ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெருவு, எவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில் D. சுந்தர வாதனால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16, 'தமிழ் உலகு' கார்யாலயத்தில் R. பஞ்சாபகேசையரால் பிரசுரிக்கப்பட்டது.